**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 12/2025**

**வா.சா.2 – பழனிசாமி**

**<u>11–08–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி குடும்பத்தாரையும் அவரது அல்லது உறவினர் சொத்துக்களை பற்றியும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி குடும்பத்துக்கு வாதியின் 50 ஏக்கர் இருந்ததா என்றால், 50 ஏக்கர் இருக்காது சுமார் 25 ஏக்கர் இருக்கும். சொத்துக்களை முத்துரத்தினமும், அவரது அப்பா பழனிசாமியும், தாத்தா நாச்சிமுத்து கவுண்டரும், முத்துரத்தினத்தின் சகோதரன் ரவிச்சந்திரனும் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து முத்துரத்தினத்தின் அத்தை தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அதில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

2. க.ச. எண்.538/2 ஆனது மொத்தம் 4.20 ஏக்கர் என்றால் சரிதான். இதற்கு வடபுறம் 538/1 உள்ளது என்றால் சரிதான். தென்புறம் பெருந்தொலுவு கிழமேல் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி 4.20 ஏக்கரில் மேற்புறம் 2.10 வாதி முத்துரத்தினத்திற்கு பாத்தியம் என்றால் சரிதான். கிழபுறம் 2.10 ரவிச்சந்திரனுக்கு என்றால் சரிதான். வாதியின் தந்தை பழனிசாமி பாகம் பிரிப்பதற்கு முன்பே 10.11.1986ல் 538/2 மற்றும் 538/1ல் கிழகோட்டில் தென்வடலாக 19 சென்ட்டை 3 ஆம் பிரதிவாதிக்கு தடத்திற்காக கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3. அதன் பிறகு 1995ல் பாகம் ஏற்படும்போது மேற்படி 19 சென்ட் தடத்தையும் சேர்த்து ரவிச்சந்திரனுக்கு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். பெருந்துறை ரோட்டில் இருந்து ராமசாமி பூமிவரை மேற்படி 19 சென்ட் தடம் உள்ளது என்றால் சரியல்ல. 19 சென்ட்டின் கிரையப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தில் 522 காலை

கிழமேல் ரோட்டிலிருந்து 538/2 ஏ காலை வழியாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால், அதில் அவர்களுக்கு பாத்தியம் இல்லை.

4. மேற்படி பூமிக்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். தற்போது அந்த தடம் தார் ரோடாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழபுறத்து பங்கு லேஅவுட்டாக பிரிக்கப்பட்டு தார் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்துரத்தினம் பூமிக்கும், ரவிச்சந்திரன் பூமிக்கும் இடையே கம்பி வேலி உள்ளது என்றால் சரிதான். ரவிச்சந்திரனின் பங்கு 4 கைகள் மாறி அதனை ரத்தினசாமியும், பழனிசாமியும் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.

5. 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியில் லேஅவுட் போட்டுள்ளதை அறிந்து மனைகளின் விற்பனையை தடுப்பதற்காக முத்துரத்தினம் தாக்கல் செய்த வழக்கில் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).

(3 ஆம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது)

<u>4 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 1995 பத்திரத்தில் காலை, விஸ்தீரணம், அத்துக்களின் விவரங்கள் சரியாக உள்ளது என்றால், சரிதான். கிரையம் வாங்கியவர்கள் 4 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில்தான் வாங்கியுள்ளார்கள் என்றால் வாங்கியிருக்கலாம். அதைப்பற்றி தெரியாது. மனைகளாக பிரிப்பதற்கு முன்பு DTCP approval

வாங்கிவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. பிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 4 ஆம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை பொது பயன்பாட்டிற்காகத்தான் பெற்றார் என்றால் தெரியாது.

2. அரசுதரப்பில் மேற்படி இடத்தை வற்புறுத்தி தானசெட்டில்மெண்ட் பெறவில்லையென்று, தான்செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தவர்கள் விரும்பி தான் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் இருக்கலாம், எனக்கு தெரியாது. வாதி எனது உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறார் என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லாததால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. அரசு தரப்பில் கட்டாயப்படுத்தி நிலத்தை செட்டில்மெண்ட் வாங்கவில்லையென்றும், ஆவணங்கள் அடிப்படையிலே வாங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.08.11 17:44:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.